# “தேவனுடைய கிரியைகள் வெளிப்படும் பொருட்டு” [9:1–5]

*வாழ்க்கை என்பது ஒரு மாபெரும் திடீர் நிகழ்வாக, தற்செயலாய் ஏற்பட்ட ஒரு பெரிய விளையாட்டாக மட்டுமே இருக்கின்றதா? நமது வாழ்வில் நிகழ்ச்சிகள் ஏற்படுவது ஏன் என்ற கேள்வி மீண்டும் மீண்டும் முன் வைக்கப்படுகின்றது. இது மிகச் சிறந்த திரைப்படங்கள் மற்றும் இலக்கியங்களின் கருப்பொருளாக இருந்து வருகின்றது, மற்றும் துன்பம் இழப்பு ஆகியவற்றின் நேரங்களில் மக்களால் இக்கேள்வி கேட்கப் படுகின்றது. “ஏன்?” என்ற கேள்விக்கு இயேசு நமது வேதபாடப் பகுதியான 9:1-5ல் தனிச்சிறந்த வகையில் பதில் எடுத்துரைத்தார்.*

## கேள்வி *(9:1, 2)*

ஒரு நாள் இயேசு, தமது சீஷர்களுடன் தேவாலயத்தினருகில் நடந்து சென்று கொண்டிருந்தார், அப்பொழுது பிறவியிலிருந்து பார்வையற்றிருந்த ஒரு மனிதரை அவர் கடந்து சென்றார் *(9:1)*. அம்மனிதர் ஒரு பிச்சைக் காரராயிருந்ததால், அநேகமாய் அவர் அழுக்காகவும், அவரது உடை கந்தலாகவும் இருந்திருக்கும் மற்றும் அவர் மிகவும் நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தார். இயேசுவும் அவரது சீஷர்களும் எருசலேமில் இருந்த ஒவ்வொரு நாளிலும் பிச்சைக்காரர்களைக் கண்டார்கள்; ஆனால் பிறவியிலிருந்தே பார்வையற்றவராயிருந்த இந்த மனிதனைக் கண்ட நிகழ்ச்சியானது ஏதோ ஒரு காரணத்தினால் அவர்கள் இயேசுவிடம் ஒரு கேள்வி கேட்கக் காரணமாயிற்று.

அம்மனிதர் ஏன் பார்வையற்றவராகப் பிறந்தார் என்று இயேசு நினைத்தார் என்பதைப் பற்றி அவர்கள் அறிய விரும்பினார்கள் *(9:2)*. அது அம்மனிதரின் பாவத்தினாலா அல்லது அவரது பெற்றோரின் பாவத்தினாலா? பாவத்தின் காரணமாகவே துன்புறுதல் ஏற்படுகிறதென்பது எப்பொழுதும் அவர்கள் சிந்தையில் இருந்தது. இதன் விளைவாக, யாரோ ஒருவரின் பாவமானது அம்மனிதரின் பார்வையற்றுப் போனதற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அது அம்மனிதரின் பாவமா? அப்படியென்றால் அவர் ஏன் பார்வையற்றவராகப் பிறந்தார்? புதிதாய்ப் பிறக்கின்ற ஒரு குழந்தையிடம் பார்வையற்ற

*தன்மையை விளைவிக்கின்ற பாவம் எதுவும் நிச்சயமாய் இருக்க முடியாது. அம்மனிதரின் பெற்றோர் பாவம் செய்திருந்தார்களா? ஒருவேளை இருக்கலாம், ஆனால் அது அவரது பெற்றோரின் பாவமாயிருந்தால், அவர்களின் மகனான இவர் ஏன் அதனால் துன்புற வேண்டும்?*

*சீஷர்களின் கேள்வியானது, பாவம் துன்பத்திற்குக் காரணமாகின்றது என்ற அவர்களின் நம்பிக்கையில் வேர் பிடித்திருந்தது, அதாவது பாவத்திற்கும் துன்பத்திற்கும் ஒரு காரண - காரிய விளைவுத் தொடர்பு இருப்பதாக அவர்கள் நம்பியிருந்தனர். கடந்த காலத்தில் இந்தக் கண்ணோட்டமானது பொதுவானதாயிருந்தது. யோபு தமது பிள்ளைகள், தமது சொத்துக்கள் மற்றும் தமது உடல் நலம் ஆகியவற்றை இழந்த பொழுது அவரிடத்திற்கு வந்த அவரது நண்பர்களில் ஒருவர் அவருடன் துக்கப்பட்டார்,*

> *குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ?*
> *சன்மார்க்கர் அதம் பண்ணப்பட்டது எப்போ? இதை நினைத்துப் பாரும்.*
> *நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்.*
> *தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து,*
> *அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகின்றார்கள்.*
> *சிங்கத்தின் கெர்ச்சிப்பும், துஷ்ட சிங்கத்தின் முழக்கமும் அடங்கும்;*
> *பால சிங்கங்களின் பற்களும் தகர்ந்துபோம்.*
> *கிழச் சிங்கம் இரையில்லாமையால் மாண்டுபோம்,*
> *பால சிங்கங்கள் சிதறுண்டுபோம் (யோபு 4:7-11).*

*துன்புறுதல் பற்றிய இதே விதமான கண்ணோட்டமொன்று, இயேசுவிடம் சிலர் "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர் களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" (லூக். 13:1) என்பது பற்றிக் கேட்ட பொழுது வெளிப்படுத்தப்பட்டது. கலிலேயரை (பிலாத்து) கொலை செய்தது பற்றி இயேசு என்ன நினைத்தார் என்று கேட்பதற்கு அவர்கள் விரும்பினார்கள். கேள்வி கேட்டவர்களுடைய நோக்கம் எதுவாயிருந்தாலும், துன்புறுதலும் பாவமும் எப்பொழுதுமே காரண - காரிய விளைவைக் கொண்டிருப்பதில்லை என்பதைப் போதிப்பதற்கு இயேசு அந்தக் கேள்வியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்; குறிப்பிட்ட துன்பமானது எப்பொழுதுமே தனது வேர்களைக் குறிப்பிட்ட பாவத்தில் கொண்டிருப்பதில்லை. பிறகு இயேசு இதே பிரச்சனையை எழுப்பிய இன்னொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். சீலோவாமிலே கோபுரம் இடிந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். அவர்களின் மரணத்திற்கு அவர்களின் பாவம் காரணமாயிருந்ததா? பிறகு இயேசு தமது கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13:5).*

இந்தக் கேள்வியைப் பற்றி யூத குருக்கள் தங்களுக்குள் பல ஆண்டுகளாக விவாதம் செய்திருந்தனர். அம்மி என்ற ரபீ, "பாவமற்ற மரணம் இல்லை, அக்கிரமமற்ற துன்புறுதல் இல்லை"[1] என்று கூறியிருந்தார். துன்புறுதல் என்பதைப் பாவத்தைக் கொண்டு விளக்கப்படுத்த முடியும் என்று அவரும் நம்பினார் என்பது தெளிவு.

இன்றைய நாட்களில் நமக்கு இந்தக் கண்ணோட்டமானது முதலில் விநோதமாகவும் அந்நியமாகவும் காணப்படலாம், ஆனால் ஆய்வு செய்து பார்க்கையில் நமது நம்பிக்கைகள் நாம் உணர்ந்தறிவதை விடவும் அதிகமாகவே அச்சீஷர்களின் நம்பிக்கைக்கு நெருக்கமாயிருப்பதை நாம் கண்டறிகின்றோம். சாவுக்கேதுவான வியாதி அல்லது பரிதாபமான விபத்துக்கள் ஆகியவற்றினால் தங்கள் சிறுபிள்ளைகளைப் பரிதாபமாகப் பறி கொடுத்த பெற்றோர்களை நான் அறிந்துள்ளேன். தொடக்க அதிர்ச்சிக்குப் பிறகு, இவர்கள் யாவருமே, தங்கள் பிள்ளைகளுக்கு இவ்விதமான துன்பங்கள் நடக்கக் காரணமாயிருக்கும்படி தாங்கள் என்ன செய்திருந்தோம் என்பதைக் கண்டறிய முயற்சி செய்யும்படி ஒரு நீண்ட காலமாக ஆராய்வதுண்டு. ஒருவேளை அது தங்களுடைய இளம் வயதின் போது செய்த பாவமாய் இருக்கலாம் என்று சிலர் நினைத்துள்ளனர். ஒருவேளை அவர்கள் அறியாமல் தேவனுக்கெதிராகப் பயங்கரமான சில வழிமுறையில் பாவம் செய்திருக்கலாம் என்று நினைத்தார்கள். சில பெற்றோர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த எண்ணங்களினால் பல ஆண்டுகளாகத் தங்களையே சித்திரவதைக்குள்ளாக்கிக் கொள்கின்றனர் என்பது கவலைக் குறியதாக உள்ளது. பிறவியிலேயே பார்வையற்றிருந்த மனிதரைப் பற்றிச் சீஷர்கள் கேட்ட கேள்வியானது நமக்கு ஒருவேளை அந்நியமானதாய் இராது கூட இருக்கலாம்!

பேரழிவு தரும் துன்பங்களை நாம் எதிர்கொள்ளாதிருந்தாலும், நாம் இன்னமும் பாவம் துன்புறுதல் பற்றி ஒரு காரண - காரிய நம்பிக்கையைப் பற்றிக் கொண்டுள்ளோம் என்பதை சிலவேளைகளில் நமது பேச்சானது காட்டிக் கொடுக்கின்றது. சோதனைகள் அல்லது இடர்ப்பாடுகளை நாம் எதிர்கொள்ளுகையில், "இதைப் பெற நான் செய்தது என்ன?" என்று சில வேளைகளில் நாம் கேட்பதில்லையா? மகிழ்ச்சியற்ற சில விஷயங்கள் நமக்கு நடக்கும் பொழுது நாம் "இது சரியல்ல!" என்று உரக்கக் கூறும் ஒவ்வொரு முறையும் இதே சிந்தனையே சுட்டிக்காட்டப்படுகின்றது. நாம், வாழ்வில் ஒவ்வொரு விஷயமும் சரியானதாக/மனநிறைவானதாக இருக்கும்படி எதிர்பார்க்கின்றோமா? நல்ல நடத்தையின் விளைவாக எப்பொழுதுமே மகிழ்ச்சி உண்டாகின்றது மற்றும் பாவத்தின் விளைவாகவே எப்பொழுதும் வேதனை உண்டாகின்றது என்று நாம் நம்புகின்றோமா?

சீஷர்களின் கேள்வியை நாம் யாவருமே சில வேளைகளில் கேட்கின் றோம். நம்முடைய அல்லது பிறருடைய துன்பங்களை எதிர்கொள்ளும் பொழுது, நாம் இது ஏன் நடக்கின்றது என்று அறிய விரும்புகின்றோம். "ஏன்?" என்ற கேள்விக்கு வேத வசனங்களில் ஒருக்காலும் முழுமையாகப் பதில் அளிக்கப்படுவதில்லை. பலமுறை அக்கேள்வி கேட்கப்பட்டிருக்க,

*எவரொருவருக்கும் முழுமையானதொரு விளக்கம் தரப்படவில்லை. யோபு அதைக் கேட்டார், மற்றும் தேவன் அவரிடத்தில், அந்தப் பதிலானது மனிதர் என்ற வகையில் அவருடைய புரிந்து கொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டது என்று கூறியதன் மூலம் பதில் அளித்தார் (யோபு 40; 41). "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்'' (யோபு 42:5, 6). ஆபகூக் கேட்டார், ஆனால் அவருக்கு பதிலொன்று ஒருக்காலும் கொடுக்கப்பட வில்லை. கடைசியில், அவர் தாம் முழுமையாகப் புரிந்து கொள்ளா விட்டாலும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கத் தீர்மானித்தார்:*

> *அத்தி மரம் துளிர் விடாமற் போனாலும்,*
> *திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்,*
> *ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்,*
> *வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும்,*
> *கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும்,*
> *தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்,*
> *நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,*
> *என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூருவேன்.*
> *ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்;*
> *அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி,*
> *உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்*
> *(ஆபகூக் 3:17-19).*

*''ஏன்?'' என்ற கேள்விக்கு இம்மக்கள் ஒரு முழுமையான பதிலைப் பெறவில்லை, மற்றும் யோவான் 9ல் இயேசுவின் சீஷர்களும் அதைப் பெறவில்லை!*

## *பதில் (9:3)*

*அந்தப் பிச்சைக்காரர் பார்வையற்றவராய்ப் பிறந்தது ஏன் என்று கேட்கப்பட்ட பொழுது, இயேசு, "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (9:3) என்று பதில் அளித்தார். மனித துன்பத்திற்கான காரணம் பற்றி இயேசுவிடம் கேட்கப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட கேள்விக்குப் பதில் அளிக்க அவர் மறுத்து விட்டார். இந்தப் பாடக்கருத்து பற்றி தேவன் கூறுவதை நாம் முழுமையாய் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களாய் இருப்பதால் இவ்வாறு இருந்திருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், மனித துன்பத்திற்கான நோக்கத்தைக் கூறுவதை இயேசு தேர்ந்து கொண்டார். அந்த மனிதர் பார்வையற்றவராகப் பிறந்தது ஏன் என்பதை இயேசு அவருடைய சீஷர்களுக்குக் கூறாவிட்டாலும், அந்தப் பார்வையற்ற மனிதருடைய வாழ்வின் நோக்கம் பற்றி அவர்களுக்கு அவர் கூறினார்: "தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்."*

*இந்த விஷயத்தில் இயேசுவின் வார்த்தைகள் வாழ்வில் நமது முன்னுரிமைகளை அமைக்க நாம் சாய்கின்ற வழிமுறையுடன் மோதுகின்றன. அமெரிக்கர்களுக்கு அவர்களது நாட்டின் சட்டப் பிரகடனத்தில் அவர்கள், ''வாழ்வு, உரிமை மற்றும் இன்பம் தேடுதல்'' ஆகியவற்றிற்கு உரிமை கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தனி நபரின் மகிழ்ச்சியை அடைதலே வாழ்வின் நோக்கம் என்று இது அர்த்தப்படுத்துவதாக மக்கள் பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். நாம் இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை மேற்கொள்ளும் பொழுது, எல்லாத் துன்பங்களும் நமது மகிழ்ச்சிக்குத் தடையாகின்றன, மற்றும் அப்படிப்பட்ட விஷயமானது மிகவும் பயங்கரமானதாக உள்ளது. இருப்பினும், நாம் வாழ்வின் நோக்கத்தை "தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துதல்" என்பதாகக் கண்ணோக்கினால், நமது துன்பங்களையும் நாம் நமது ஆசீர்வாதங்களைக் கண்ணோக்குவது போலவே கண்ணோக்குவோம்; அது தேவனை மகிமைப்படுத்துகின்ற ஒரு வழிமுறையாகும். அதுவே இயேசுவின் சீஷர்களுக்கு அவரது செய்தியாக இருந்தது. அந்தப் பார்வையற்ற மனிதர் பார்வையற்றவராகப் பிறந்தது ஏன் என்பதை அவர்களுக்கு அவர் கூறாதிருந்தாலும் கூட, அந்தப் பார்வையற்ற மனிதருடைய வாழ்வின் நோக்கத்தை அவர்களுக்கு அவர் கூறினார்: தேவனை மகிமைப்படுத்துதல்!*

*துன்பத்தில் ''தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்தி''யிருக்கின்றவர்களைப் பற்றி நான் நினைக்கும் பொழுது, பல மக்கள் சிந்தையில் வருகின்றனர். ஒரு இளம் மனிதர் வரையறைக்குட்பட்ட மனவளம் உடையவராயிருந்தார். அவரது பெற்றோர் தங்கள் மகன் ஏன் இப்படிப் பிறந்தான் என்று தங்களுக்குத் தாங்களேயும், தேவனிடத்திலேயும் இலட்சக்கணக்கான முறைகள் கேட்டிருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. அவர்களின் மகன் ஒரு பிரசங்கத்தின் முடிவில் அழைப்புக்குப் பதில் செயல் செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட இரவை நான் எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பேன். அவர் இயேசுவில் கொண்டிருந்த தமது விசுவாசத்தை "நான் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அதைச் செய்ய விரும்புகின்றேன்" என்ற அழகிய எளிமையுடன் அறிக்கையிட்டுக் கூறிய பொழுது அங்கு கூடியிருந்த சபையினரின் கண்கள் யாவும் பனித்தன. அந்தக் கணத்தில் தேவனுடைய கிரியையானது அந்த இளைஞரின் வாழ்வில் வெளிப்படுத்தப்பட்டது.*

*ஒரு பிரசங்கியாருக்கு வலிவைக் குறைக்கும் தீவிர நோய் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்ட பிறகு அவரது பிரசங்கத்தை நான் ஒருமுறை கேட்டதையும் நினைத்துப் பார்க்கின்றேன். அவர் தேவனிடத்தில் தாம் குணமாக வேண்டும் என்று ஜெபித்ததாகச் சபையாரிடம் கூறினார்; ஆனால் அவர் குணமடைய முடியாது போகுமென்றால், எப்படி மரிப்பது என்பதைச் சபையாருக்குக் காண்பிக்க தேவன் அவருக்கு உதவ வேண்டும் என்பதே அவரது ஜெபமாயிருக்கும் என்று அறிவித்தார். ஒரு சில மாதங்களுக்குப் பிறகு அவர் அதையே செய்தார்; அவரது மரணத்தில் தேவனுடைய கிரியையானது வெளிப்படுத்தப்பட்டது!*

*பல ஆண்டுகளாகப் புற்று நோயினால் வேதனைப்பட்டு தற்சமயம்*

கர்த்தரிடம் சென்றுள்ள ஒரு கிறிஸ்தவப் பெண்மணி, துன்பத்தில் தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்திய இன்னொரு எடுத்துக்காட்டாக இருக்கின்றார். மக்கள் ''ஏன்?'' என்று கேட்பதை நான் பலமுறை கேள்விப்பட்டுள்ளேன். அநேக ஆண்டுகளாக அவளது சுகவீனத்தை நான் திரும்பி பார்க்கும் போது, தங்கள் நல்ல ஆரோக்கியத்தில் ஒரு சில மக்களே செயல்படுத்தியுள்ள வழிமுறையில் அவள் தனது வியாதியில் தேவனுடைய கிரியையைச் செயல்விளக்கப்படுத்தினாள் என்று நான் நம்புகின்றேன்.

சிலுவையில் தொங்கிய இயேசுவே நோக்கத்துடன் வாழ்வதற்கான நிறைவான எடுத்துக்காட்டாக உள்ளார். அது நியாயமற்றதாக, மற்றும் கொடூரமானதாக இருந்தது. பல வகையில் அது துன்பமானதாக இருந்தது; இருப்பினும் தமது வாழ்விலும் மரணத்திலும் "தேவனுடைய கிரியைகள் வெளிப்படும்படியாக'' இயேசு சிலுவையிலே தொங்கினார். இயேசு சிலுவையில் துன்புற வேண்டியிருந்தது ஏன் என்பதை விளக்கக் கூடிய எவரையும் நான் ஒருக்காலும் சந்தித்ததில்லை. நாம் பரலோகத்தைச் சென்றடையும் வரை அதை முழுமையாகப் புரிந்து கொள்வோம் என்று நான் நம்பவில்லை. இருப்பினும், இயேசு சிலுவையில் மரிக்கச் சென்ற காரணத்தினால் தேவனுடைய கிரியையானது ஒரு அற்புதமான வழிமுறையில் வெளிப்படுத்தப்பட்டது என்ற உண்மையை ஒரு சிறு குழந்தையும் கூட மதிக்க முடியும். அவர் தேவனுடைய நோக்கத்திற்காகவே வாழ்ந்து மரித்தார்.

தேவன் நம்மை விட்டுத் திரும்பிக் கொள்வதற்கும் மற்றும் தேவனுடைய மகிமைக்கென்று நாம் நேர்மறையாகப் பயன்படுத்த முடியாமைக்கும் காரணமாயிருக்கக் கூடிய சில விஷயங்கள் என்று நாம் நம்புபவற்றை நாம் யாவருமே எதிர்கொள்ளுகின்றோம். சிலர், ''ஆனால் நான் விவாகரத்துப் பெற்றுள்ளேனே''; ''நான் எனது திருமண வாழ்வில் போராடுகின்றேனே''; ''எனது பிள்ளைகளுடன் எனக்குப் பிரச்சனை உண்டே"; "நான் சுகவீனமாய் இருக்கின்றேனே" அல்லது "நான் மிகவும் முதியவனாக/இளைஞனாக இருக்கின்றேனே'' என்று கூறலாம். நமது உலகினுள் நடந்து வரும் இயேசு நம்மிடம், ''நீ இப்பொழுது எதிர்கொண்டுள்ள சிரமங்களை ஏன் எதிர்கொண்டுள்ளாய் என்று நான் உனக்குக் கூறப்போவதில்லை, ஆனால் நான் இதை உனக்குக் கூறுவேன்: உனது பிரச்சனைகள் எதுவாய் இருந்தாலும் உனது வாழ்வில் - ஒருவேளை உனது பிரச்சனைகளின் நிமித்தமாகவே - தேவனுடைய கிரியையானது வெளிப்படுத்தப்படக் கூடும்!" என்று கூறுகின்றார்.

இதற்குப் பவுல் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளார், அவர் தமது ''மாம்சத்தில் இருந்த முள்'' (2 கொரி. 12:7) ஒன்றினால் வாதிக்கப் பட்டிருந்தார். அதை நீக்கும்படி கர்த்தரிடத்தில் மூன்று முறை அவர் வேண்டிக் கேட்டார். அவர் தமது துன்பத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டால் தேவனுக்கென்று இன்னும் எவ்வளவு அதிகமாய் ஊழியத்தை நிறைவேற்ற முடியும் என்று பவுல் கற்பனை செய்திருப்பார் என்று நான் உறுதியாய்க் கூறுவேன், இருப்பினும் பவுலின் மாம்சத்தில் இருந்த முள்ளை நீக்கிப் போடக் கர்த்தர் மறுத்து விட்டார். அதற்குப் பதில், தேவன்

பின்வரும் செய்தியை அவருக்குக் கொடுத்தார்: "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12:9). கடைசியில் பவுல், பலம் மற்றும் நல்ல உடல் நலம் ஆகியவற்றின் மூலமாகத் தாம் செய்வதைக் காட்டிலும், பலவீனத்தின் மூலமாகத் தேவனுடைய வல்லமையைச் சிறந்த முறையில் செயல்விளக்கப்படுத்த முடியும் என்ற தேவனுடைய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார். துன்பத்தை சமாளிப்பதற்கு, நாம் பின்பற்றும்படியாக ஒரு முன்மாதிரியை பவுல் இதில் நமக்குக் கொடுத்திருக்கிறார். முதலில், நாம் நமது வேதனையிலிருந்து விடுவிக்கும்படி தேவனைக் கேட்கின்றோம். இதுவே வேதனைக்கான நமது இயல்பான மனித எதிர்ச் செயலாக உள்ளது, மற்றும் விடுதலைக்காகக் கதறுவது சரியானதாகவே உள்ளது. இருப்பினும், தேவனிடத்தில், "எது வந்தாலும் சரி, நீர் என் வாழ்வில் மகிமைப்பட வேண்டும்" என்று கூறுவதே கிறிஸ்தவர்களுக்கு இரண்டாவது படியாக உள்ளது. நமது சூழ்நிலைகள் எதுவாயிருந்தாலும், நாம் யாவரும் தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட முடியும்!

டேவ் டிராவெக்கி அவர்கள் புற்று நோய்க்கெதிராக போராடிய பிறகு பேஸ்பால் விளையாட்டில் திரும்பவும் பிரபலமாக வந்த பிறகு சான்பிரான்சிஸ்கோவின் மாபெரும் பேஸ்பால் விளையாட்டுக் குழுவிற்காக அவர் மிகச் சிறந்த விளையாட்டு வீரராக விளையாடிப் பணியாற்றியதை முடிக்குமளவுக்கு ஒரு காயத்தினால் துன்புற்றார். பிற்பாடு அவர் பின்வருமாறு எழுதினார்:

> துன்பம் நம்மை ஒரு - வழிக் கதவின் வழியே தள்ளுகின்றது, மற்றும் நாம் அதனுள் ஒருமுறை கடந்து சென்ற பிறகு, அந்தத் துன்பத்திற்கு முன்பிருந்த வாழ்க்கை வழிமுறைக்கு ஒருபோதும் நாம் திரும்ப முடிவதில்லை ... அவ்விதம் செய்ய நாம் எவ்வளவு கடின முயற்சி மேற்கொண்டாலும், நாம் திரும்பிச் செல்ல முடிவதில்லை. நாம் செய்ய முடிவதெல்லாம், ஒரு காலத்தில் இருந்த நன்மை, நாம் பெற்றிருந்த மகிழ்வான வேளைகள், சிரிப்பு, அன்பு, நாம் பகிர்ந்து கொண்ட இனிய நினைவுகள் ஆகியவற்றிற்காக நன்றி செலுத்துவது மட்டுமேயாகும். பிறகு, அவ்வேளைகள் மற்றும் நம்மேல் அன்பு கொண்டவர்கள் யாவருக்கும் பிரியாவிடை கூறி, சூரியனுக்கும் சந்திரனுக்கும் விண்மீன்களுக்கும் சுற்று வட்டப்பாதைகளைக் கொடுத்தவருடைய கரத்துடன் நமது கரத்தை இணைத்துக் கொண்டு, நமது வாழ்விற்கு அவர் ஒரு ஓட்டத்தைக் கொண்டுள்ளார் என்று நம்பிக்கையாய் இருப்பதே நாம் செய்யக் கூடியதாகும்.[2]

## முடிவுரை

உலகில் பின்வரும் கேள்வி நிலைநிற்கின்றது: "வாழ்வு என்பது அர்த்தம் கொண்டுள்ளதா? அல்லது இது யாவும் தற்செயலான ஒரு விளையாட்டுத் தானா?" இந்தக் கேள்விக்கு உலகத்தாரிடம் பதில் இல்லாதிருக்கலாம், ஆனால் இயேசுவின் பின்பற்றாளர்களிடம் பதில் உண்டு. இவ்வுலகில் நமக்கு என்னதான் நடந்தாலும் தேவனுடைய மகிமைக்கு நாம்

பயன்படும்படியாக இருக்கவே நடக்கின்றன என்று நாம் அறிகின்றோம். நமது சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும் "தேவனுடைய கிரியைகள் நம்மில் வெளிப்படும்படி" வாழ்வோம்!

குறிப்புகள்

[1]Leon Morris, *The Gospel According to John,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 478.
[2]Dave Dravecky, *When You Can't Come Back* (Grand Rapids, Mich.: Zondervan, 1992), 159.